முதன்மை இயக்குநர், நெடுஞ்சாலைத் துறை, கிண்டி, சென்னை–25 அவர்களின் செயல்முறை ஆணை.
பிறப்பிப்பவர் – திரு பி.ஆர்.குமார், எம்.இ.,

கோட்டப் பொறியாளர் அலுவலகம் நெடுஞ்சாலை க (ம) ப, வேலூர் – 4
08 APR 2022

செயல்முறை ஆணை எண். நிர்.3 (1) / 17612 / 2012 நாள். 22.03.2022

பொருள் : பணியமைப்பு – நெடுஞ்சாலைத் துறை – தமிழ்நாடு அமைச்சுப்பணி – ஒருங்கிணைந்த சார்நிலைப் பணிகள் தேர்வு–1,2009–2011ம் ஆண்டிற்கு உதவியாளர்களாக நேரடி நியமனம் மூலம் தேர்வு செய்து நியமனம் செய்து நியமனம் செய்ய ஒதுக்கீடு செய்யப்பட்டவர் – திரு.ஆர்.பிரதாப், உதவியாளர், வேலூர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, கோட்ட அலுவலகம் – பணிவரன்முறை செய்து – ஆணை வழங்குதல் தொடர்பாக.

| | |
|---|---|
| கோ.பொ.(நெ) | |
| கோ.க. | |
| மு.வ.தொ.அ. | |
| க.கா. | |

பார்வை :
1. செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை அவர்களின் கடிதம் எண். 8483/OTD-B2/2010, நாள். 06.02.2013
2. முதன்மை இயக்குநர் (நெ) சென்னை அவர்களின் செயல்முறை ஆணை எண்.நிர்3(1)/17612/2012, நாள்.05.03.2013
3. செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சென்னை–09. அவர்களின் proceeding No.4665/CV.2(1)/2013–6, நாள்.24.09.2021
4. தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, சென்னை அவர்களின் கடித எண். 17728 /நிர்2/ க(ம)ப/ 2021, நாள்.29.12.2021.

---

பார்வை 1–ல் காணும் தேர்வாணையக் கடிதத்தின் படி உதவியாளர் பதவிக்கு தெரிவு செய்யப்பட்டு, இத்துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள திரு.ஆர்.பிரதாப், அவர்களுக்கு இனம் குறித்த உண்மைத் தன்மை தொடர்பாக அதிகாரப்பூர்வ கடிதம் பெறப்படும் வரை பணிவரன்முறை செய்யப்படமாட்டாது என்கிற நிபந்தனையின் அடிப்படையில் பார்வை 2–ல் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையில் உதவியாளராக பணி நியமன ஆணை வழங்கப்பட்டது. அதன்படி தனியர் 15.03.2013 மு.ப முதல் இத்துறையில் பணிபுரிந்து வருகிறார்.

இந்நிலையில், தனியரின் இனம் உண்மையானது என பார்வை–3ல் காணும் செயல்முறை ஆணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதனடிப்படையில், தற்போது வேலூர்(நெ), கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகத்தில் பணிபுரியும் திரு.ஆர்.பிரதாப், (பிறந்ததேதி. 15.11.1987) உதவியாளர் அவர்களுக்கு உதவியாளர் பதவியில் பணியில் சேர்ந்த நாளான 15.03.2013 மு.ப முதல் கீழ்காணும் நிபந்தனையை உள்ளடக்கி பணிவரன் முறைசெய்து ஆணை வழங்கப்படுகிறது.

“The regularization is subject to the outcome of the WPs (if any) pending on the files of the Hon’ble High Court of Madras/Madurai Bench of the Hon’ble High Court of Madras relating to Combined subordinate Service Examination –I for the year 2009 - 2011 recruitment”.

மேலும், தற்போது வழங்கப்படும் பணி வரன்முறை உத்தரவின் அடிப்படையில் உதவியாளர் பதவியின் முதுநிலையில் எவ்வித முன்னுரிமையும் கோர இயலாது எனவும் இதன் மூலம் தெரிவிக்கப்படுகிறது.

பணி வரன்முறை செய்யப்பட்ட நாளிலிருந்து தொடர்ச்சியாக மூன்றாண்டுக்கால பணிக் காலத்தில் இரண்டாண்டுக்காலம் தகுதிகாண் பருவமாக வைக்கப்படும் எனவும், தகுதிகாண் பருவம் முடிப்பதற்கு அரசாணை (நிலை) எண். 55 / பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்தம் (B) துறை / நாள் 17.4.2012ன்படி நெடுஞ்சாலைத்துறையில் நேரடி நியமனம் மூலம் உதவியாளர் பணி நியமனம் செய்யப்படும் தனியர்கள் கீழ்கண்ட தேர்வுகளில் தேர்ச்சி பெற வேண்டும் என தெரிவிக்கப்படுகிறது.

- பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் நடத்தப்படும் 2 மாத கால அடிப்படைப் பயிற்சியை நிறைவு செய்து தேர்ச்சி பெறவேண்டும்.
- நெடுஞ்சாலைத்துறை அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கான கணக்குத் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.
- தமிழ்நாடு அலுவலக நடைமுறைநூல் தேர்வில் தேர்ச்சி பெறவேண்டும்.

பி.ஆர்.குமார்
முதன்மை இயக்குநர்
நெடுஞ்சாலை.

**பெறுநர்:–**

திரு.ஆர்.பிரதாப், உதவியாளர்
வேலூர்(நெ) அலுவலகம், கட்டுமானம் (ம) பராமரிப்பு, கோட்ட அலுவலகம்.
(கோட்டப்பொறியாளர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, வேலூர் மூலமாக. )

**நகல்:–**

செயலாளர், தமிழ்நாடுஅரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–03.
தலைமைப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, சென்னை–25.
கண்காணிப்புப் பொறியாளர் (நெ) கட்டுமானம் (ம) பராமரிப்பு, திருவண்ணாமலை.
கோட்டப்பொறியாளர்(நெ), கட்டுமானம் (ம) பராமரிப்பு, வேலூர்.

// உண்மை நகல் / உத்தரவின்படி அனுப்பப்படுகிறது //

22/03/2022
கண்காணிப்பாளர்

22/03/22